## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| M.C.O.P. No. 58/2018 | Date : 16.12.2022 | PW1 |
|---|---|---|
| Name: சின்னசாமி | S/o. **நாகப்பரெட்டி** | |
| Evidence Recorded Time: 12.41 P.M. to 12.55 P.M. | | |

**3–ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

விபத்து சம்மந்தமாக நான்தான் புகார் கொடுத்தேன். நான் கொடுத்த புகாரின் அடிப்படையில்தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார்கள். முதல் தகவல் அறிக்கையில் இரண்டு வாகனங்கள் சம்மந்தப்பட்டுள்ளதாக காணப்படுகிறது என்றால் சரிதான். TN 30 S 8076 பதிவெண் கொண்ட டிராக்டர் வளைவில் திரும்பும் போது முன்னே ஒரு கார் சென்றதால் அவர் திடீரென்று பிரேக் போட்டதால் அப்போது என் மகன் பைக்கில் மெதுவாக சென்றார் அப்போது லாரி வேகமாக வந்து என் மகன் மீது மோதி இரண்டு வண்டிக்கும் இடையில் என் மகனுக்கு அடிபட்டு சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். நான் தவறாக சொல்கிறேன் என்றாலும் என் புகாரிலேயே டிராக்டர் மீது மோதிதான் என் மகன் விழுந்ததாகவும் பின்னால் வந்த லாரி மகன் மீது இடித்ததாகவும் சொல்லியுள்ளேன் என்றால் அவ்வாறு இல்லை. டிராக்டரின் உரிமையாளரையும், காப்பீட்டு நிறுவனத்தையும் தரப்பினராக சேர்க்காத காரணத்தினால் இந்த மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. 3–ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த பதிலுரையில் டிராக்டர் உரிமையாளரை சேர்க்கவேண்டும் என்று சொல்லியிருந்தும் அதற்கு நாங்கள் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. முன்னால் சென்ற டிராக்டர் சைகை எதுவும் காட்டாமல் திடீரென்று பிரேக் போட்ட காரணத்தினால்தான் இந்த விபத்து நடைபெற்றது என்றால் சரியல்ல. என் மகன்தான் முன்னால் சென்ற வாகனத்தை கவனிக்காமல் சென்று அவரே சென்று மோதி இந்த விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. என் மகன் மாதம் ரூ.25000/– சம்பாதிப்பதற்கான ஆவணங்களை ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான், ஒப்படைக்க தயாராக இருக்கிறேன். ம.சா.ஆ.17 முதல் ம.சா.ஆ.20 வரையிலான ஆவணங்கள் இந்த வழக்கிற்காக தயார் செய்யப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல. அனல் மின் நிலையத்திற்கு நிலம் கொடுத்து தொடர்பான ஆவணங்களை ஒப்படைக்கவில்லை

என்றால் ஒப்படைத்துள்ளேன். என் தரப்பில் தாக்கல் செய்த ம.சா.ஆ.18 ஆவணத்தில் யாருக்கு எழுதிக்கொடுக்கப்பட்டது என்ற விவரம் இல்லை என்றால் சரியல்ல. விபத்து நடைபெற்ற இடமான ராமன் நகர் பகுதியில் அங்கு வரும் வாகனங்கள் அனைத்தும் மெதுவாகத்தான் வரும் என்றால் சரியல்ல. நான் சொல்வது பொய் என்றாலும் அந்த இடத்தில் ஆள் நடமாட்டம் அதிகமாக இருப்பதால் வரக்கூடிய வாகனங்கள் மெதுவாகத்தான் வரும் என்றால் சரியல்ல. 3–ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்ட வாகனத்தின் ஓட்டுநர் வாகனத்தை மெதுவாகத்தான் ஓட்டினார் என்றாலும் என் மகன்தான் ஆஜாக்கரதையாக இரு சக்கர வாகனத்தை ஓட்ச சென்று இந்த விபத்தை ஏற்படுத்தினான் என்றால் சரியல்ல. விபத்தில் இரண்டு வாகனங்கள் சம்மந்தப்பட்டுள்ளதால் டிராக்டர் வாகனத்தை இந்த மனுவில் சேர்க்காத காரணத்தினால் இந்த மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. கேட்டிருக்கும் இழப்பீட்டு தொகை அதிகம் என்றால் சரியல்ல. 3–ம் எதிர்மனுதாரர் பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை – இல்லை.</u>**

ஒம்/–PW1,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.